# புதிய தார் சாலை அமைக்க
# தகவல் கேட்டு எழுதும் கடிதம்:

நாள்: 00-00-000

அனுப்புநர்

(பெயர் & முகவரி)

பெறுநர்

பொது தகவல் அதிகாரி,

(பஞ்சாயத்து/நகராட்சி /மாநகராட்சி அலுவலகத்தின் முகவரி)

அய்யா,

பொருள்: தகவல் பெறும் உரிமைச்சட்டம் 2005 - சாலைகள் போடுவது தொடர்பான சில தகவல்கள் கோருதல் - தொடர்பாக.

- - - - - -

தகவல் பெறும் உரிமைச்சட்டம் 2005, பிரிவு 6(3)-ன் கீழ் சாலைகள் போடுவது தொடர்பாக கீழே கேட்டுள்ள தகவல்களை வழங்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

1. அ) கடந்த ஐந்து ஆண்டுகளில் ஒப்பந்தப்புள்ளி ஒளிவின்மை சட்டப்படி எத்தனை பணிகள் மேற்கொள்ளப் பட்டன? ஆ) அவை எவை எவை?

2. அ) ஒப்பந்ததாரர் தரவரிசைப்பட்டியல் தங்கள் அலுவலகத்தில் உள்ளனவா? ஆம் எனில் அதன் நகல் வழங்கவும்? ஆ) ஆம் எனில் என்னென்ன வேலைகள் யார் யாருக்கு எவ்வளவு ரூபாய்க்கு தரவரிசைப்பட்டியல்படி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இ) இல்லை எனில் அதற்கு ஏதாவது தனிப்பட்ட காரணங்கள் இருப்பின் அவைகளைத் தெரிவிக்கவும். ஈ) தரவரிசைப்பட்டியல் maintain பண்ண வேண்டும் என்று அரசு விதிகளில் உள்ளதா? உ) ஆம் எனில் அதன் நகல் வழங்கவும்.

3. அ) ஒப்பந்தங்கள் பெற கடைப்பிடிக்கப்பட வேண்டிய நடைமுறை விதிகளின் நகல்கள் வழங்கவும். ஆ) கடந்த ஐந்து ஆண்டுகளில் எத்தனை வேலைகள் மற்றும் எந்தெந்த வேலைகள் ஒப்பந்தப் புள்ளி கோரி பத்திரிகைகளில் விளம்பரம் செய்யப்பட்டது? இ) எந்தெந்த வேலைகள் எந்தெந்த பத்திரிகைகளில் விளம்பரம் செய்யப்பட்டது என்ற முழு தகவல்களை வழங்கவும்.

4. அ) கடந்த ஐந்து ஆண்டுகளில் நடைபெற்ற வேலைகளில் குறித்த காலத்திற்குள் வேலைகளை முடிக்காததால், ஒப்பந்தத் தொகைக்கு மேல் செலவு செய்யப்பட்ட வேலைகள் எத்தனை? ஆ) அதற்கு வழங்கப்பட்ட தொகை எவ்வளவு? ஒவ்வொரு வேலைக்கும் தனித்தனியாக வேலையின் பெயர், ஒப்பந்ததாரர் பெயர், ஒப்பந்தத் தொகை, அதற்கு மேல் வழங்கப்பட்ட தொகை ஆகிய தகவல்களை வழங்கவும்.

5. அ) தங்கள் அலுவலகத்தின் மொத்த செலவினங்களின் மேல் கடந்த ஐந்துஆண்டுகள் நடந்த தணிக்கை அறிக்கை நகல் வழங்கவும். ஆ) அதில் குற்றம் சொல்லப்பட்ட இனங்கள் என்னென்ன? இ) அதன் மேல் இதுவரை எடுத்துள்ள நடவடிக்கை விவரங்களை தெரிவிக்கும் கோப்புகளின் நோட்பைல் உட்பட அனைத்து ஆவணங்களின் ஒளி நகல்கள் வழங்கவும்.

6. இந்த ஆண்டு எத்தனை சாலைகளுக்கு புதிதாக தார் போட தற்போது முடிவு செய்யப்பட்டுள்ளது? அவைகளின் பெயர்களைத் தெரிவிக்கவும்.

7. அ) பயன்பாட்டில் இருக்கும் தார்சாலைகளில், பழுதடைந்ததன் காரணமாக எத்தனை வருடங்களுக்கு ஒருமுறை புதிதாக தார் சாலை அமைக்கலாம் என்று விதிகளில் சொல்லப்பட்டுள்ளது? ஆ) அந்த விதிகளின் நகல்கள் வழங்கவும்.

8. அ) . . . . . (**சாலையின் பெயர் தெளிவாக**) சாலைக்கு எந்த ஆண்டு, எந்தத் தேதியில் கடைசியாக தார் போடப்பட்டது? ஆ) அதன் ஒப்பந்ததாரர் பெயர் என்ன? இ) அப்போது இறுதி செய்யப்பட்ட டெண்டர் நகல் ஒன்று வழங்கவும்.

9. மேற்படி சாலையில் தார் சாலை அமைக்க தற்போது இறுதி செய்யப்பட்ட டெண்டர் நகல் ஒன்று வழங்கவும்.

10. அதற்கு எவ்வளவு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது? ஆ) ஒப்பந்ததாரர் பெயர் முகவரி வழங்கவும்.

11. தற்போது போடப்படும் மேற்படி தார் சாலைக்கு அ) எத்தனை அங்குலம் உயரத்திற்கு ஒன்றரை ஜல்- போடப்படும்? இ) எத்தனை அங்குலம் உயரத்திற்கு முக்கால் ஜல்- போடப்படும்? ஆ) எத்தனை அங்குலம் உயரத்திற்கு சிப்ஸ் போடப்படும். இ) எந்த கிரேடு தார் உபயோகப்படுத்தப்படும்? ஈ) எவ்வளவு அளவு (Quantity) தார் உபயோகப்படுத்தப்படும்?

12. அ) சாலைகளுக்கு உபயோகப்படுத்தப்படும் தார் என்ன கிரேடு என்பதை சரிபார்க்கும் பழக்கம் உண்டா? ஆ) ஆம் எனில் பயன்படுத்திய தாரின் தரம் எந்த அடிப்படையில் கண்டறியப்படும்?

13. அ) சாலை போட்டபின் அதற்குரிய ஒப்பந்தத் தொகையை வழங்கும்போது எந்த கிரேடு தார் உபயோகப் படுத்தப்பட்டதோ, அந்த கிரேடு தார் உபயோகிக்கப் பட்டதற்குரிய அத்தாட்சி அல்லது ரசீது சரிபார்த்து பெற்றுக் கொள்ளும் பழக்கம் உண்டா? ஆ) ஆம் எனில் இதற்கு முன் மேற்படி சாலையில் தார் போட்டபோது உபயோகிக்கப்பட்ட தார் வாங்கியதற்கான ரசீதின் நகல் வழங்கவும்.

14. போடப்படும் சாலையை எவ்வளவு காலத்திற்கு ஒப்பந்ததாரர் பொறுப்புடன் பராமரிக்க வேண்டும் என்று நிபந்தனைகள் விதிக்கப்பட்டுள்ளதா? ஆம் எனில் அதன் முழு விவரம் வழங்கவும்.

15. மேற்குறிப்பிட்டுள்ள தகவல்கள் தொடர்பான கோப்புகளைப் பார்வையிட, தேவையான அத்தாட்சி செய்யப்பட்ட நகல்கள் பெற்றிட நேரம், நாள் குறித்து எனக்குத் தெரிவிக்கவும்.

16. தாங்கள் வழங்கும் தகவல்கள் எனக்கு திருப்தி அளிக்க வில்லை எனில், நான் யாருக்கு விண்ணப்பிக்க வேண்டும். நான் கேட்டுள்ள ஆவணங்களை வழங்க, நான் செலுத்த வேண்டிய பணத்தை யார் பெயரில், எப்படி செலுத்துவது என்ற விவரங்களை வழங்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

மேற்படி தகவல்களைப் பெறுவதற்கு இத்துடன் ரூ.10/-க்கு நீதிமன்ற வில்லை (**என்ன இணைக்கப்பட்டுள்ளதோ அதனை குறிப்பிட வேண்டும்**) இணைத்துள்ளேன்.

இப்படிக்கு,

(**பெயர் & கையெழுத்து**)